# யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இலங்கை
# இராமநாதன் நுண்கலைக்கழகம்
# பல்கலைக்கழக அனுமதி – 2017/2018

- நுண்கலைமாணி (சங்கீதம்)
- நுண்கலைமாணி (நடனம்) / ( பரதநாட்டியம் )
- நுண்கலைமாணி (சித்திரமும் வடிவமைப்பும்)

ஆகியவற்றில் இளநுண்கலைமாணிப் பட்டப்படிப்புகளைப் பயில்வதற்கான மாணவர்களைத் தெரிவுசெய்வதற்கான உளச்சார்பு மற்றும் செயல்முறைப் பரீட்சைகள்.

- மேற்படி நான்கு வருடப் பட்டப்படிப்புக் கற்கைநெறிகளுக்கு அனுமதி பெறவிரும்பும் தகுதியான விண்ணப்பதாரிகளிடமிருந்து **21.02.2018** ஆம் திகதி வரை விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

## அனுமதிக்கான பொது நிபந்தனைகள்

### அனுமதிக்கான தகைமைகள்

- சங்கீதம், நடனம், சித்திரமும் வடிவமைப்பும் கற்கை நெறிகளில் யாதேனுமொன்றைத் தெரிவு செய்வதற்கு விரும்பும் விண்ணப்பதாரிகள் 2017 ஆண்டு நடைபெற்ற க.பொ.த (உ.த)பரீட்சையில் சித்தியடைந்து இருப்பதுடன் தெரிவு செய்ய விரும்பும் பட்ட பாடநெறிக்குரிய பாடத்தில் அதாவது சங்கீதம் - கர்நாடகம் அல்லது நடனம் - பரதம் அல்லது சித்திரக்கலையில் ஆகக் குறைந்தது திறமைச்சித்தியும் (C), மற்றைய இரண்டு பாடங்களிலும் ஆகக் குறைந்தது சாதரணதரச் சித்தியும் (S) பெற்றிருத்தல் வேண்டும்.

### தகுதிகாண் பரீட்சை

- மேற்குறித்த கற்கைநெறி அனுமதிக்கான விண்ணப்பதாரிகள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தால் நடத்தப்படும் ஆற்றுகைப் பரீட்சை, நேர்முகப் பரீட்சை உள்ளடங்கிய பரீட்சைக்கு (Aptitude Test) யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் தோற்றுதல் வேண்டும்.
- இப்பரீட்சைகள் **21.03.2018 திங்கள்** தொடக்கம் பத்து நாட்கள்வரை நடைபெறும்.

### விண்ணப்பங்களை சமர்ப்பித்தல்

- விண்ணப்பதாரிகள் www.jfn.ac.lk என்ற யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இணையத்தளத்திலிருந்து விண்ணப்பப் படிவங்களைத் தரவிறக்கம் செய்து தகுதிகாண் பரீட்சைக்கு விண்ணப்பிக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

- மேற்படி தகுதிகாண் பரீட்சைக்கான விண்ணப்பத்துடன் ஏதாவது ஒரு மக்கள் வங்கிக் கிளையில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மக்கள் வங்கிக் கினளக் கணக்கு இல. **1621 0016 0000 880** இற்கு ரூபா 300/= செலுத்திப் பெற்ற பற்றுச்சீட்டுடன் **பாடசாலை அதிபர் அல்லது சமாதான நீதவானால் உறுதிப்படுத்தப்பட்ட க.பொ.த (உ.த) பெறுபேற்றுப் பத்திரத்தினது போட்டோப் பிரதியும்** அனுப்பப்படல் வேண்டும். பரீட்சைப் பெறுபேற்றில் அல்லது பெயரில் மாற்றங்கள் ஏதும் இருப்பின் அதற்குரிய சத்தியக்கடதாசி சமர்ப்பிக்கப்பட்டு உறுதிசெய்யப்பட வேண்டும். விண்ணப்பதாரிகள் சுய விலாசம் இடப்பட்ட முத்திரை ஒட்டப்பட்ட 23 cmx10cm அளவுள்ள கடித உறையை இணைத்து அனுப்புதல் வேண்டும்.

- பிரவேச அனுமதித் தகைமையைப் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரிகளுக்கு ஆற்றுகை/ நேர்முகப் பரீட்சைக்குரிய அனுமதி அட்டை அனுப்பி வைக்கப்படும்.

- பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் யாவும் **21.02.2018** ஆம் திகதிக்கு முன்னதாக **சிரேஸ்ட உதவிப்பதிவாளர் ,அனுமதிகள் கிளை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம்** எனும் முகவரிக்கு கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் கற்கை நெறியைக் குறிப்பிட்டு பதிவுத்தபால் மூலம் அல்லது நேரில் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

- அனுமதிக்குரிய ஆகக்குறைந்த தகைமையை கொண்டிராததும், பணம் செலுத்திய பற்றுச்சீட்டு சமர்ப்பிக்கப்படாததும், பெறுபேற்றுப் பத்திரங்களின் உறுதி செய்யப்பட்ட போட்டோ பிரதிகள் இணைக்கப்படாததும், விண்ணப்ப முடிவுத்திகதியில் கிடைக்கப்பெறாததுமான விண்ணப்பங்கள் யாவும் நிராகரிக்கப்படும்.

- மேலதிக விபரங்களுக்கு தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி எண் 021 222 6714.

பதிவாளர்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.